# நினைவைப் போற்றுவோம்!



பெருமைமிகு ஆசிரியப் பணியைப் பிரியமாய் அணைந்து,
அருந்தமிழ் மொழியை அழகுடன் பயின்று ஏகி,
தன்னிகரில்லா ஆசிரியப்பணியில் தமிழைச் சூடி,
தமிழால் நிறைந்து; பெருமைகொள் நிலையில்;

கண்ணின் நிறைவாய்க் கருத்தொருமித்து என்றன்,
அத்தாத்தை **விஜயலஷ்மி**யைக் கைத்தலம் பற்றி
பிள்ளைக் கனியமுது இரண்டினைப் பெற்று,
பெயரன் பெயர்த்தியுமாய் நாற்பத்தியெட்டு ஆண்டுகள்!

பெருந்தவமாய் இறைப்பணியும் கொண்டு நிறைந்து,
பெருமைகொள் இல்லறவாழ்வை இனிதே கடக்கையில்,
மருத்துவம் தேடியுடலும் வருந்திட கழிந்த சிறு நாட்கள்!
மயங்குறு நிலையில் காலன் தாமும் உள்நுழைந்து,

மனிதவுடலை நீக்கும் மாயத்தைச் செய்திட,
மண்ணில் பிறந்து எழுபத்தி நான்கு ஆண்டுகளில்,
மன்னிய உறவுகள் யாவும் துயருற பறந்த,
அண்ணன் **ஜெயபாலன்** நினைவு தன்னை,

நெகிழ்ந்து போற்றித் திளைந்து கடந்தகால,
காலநினைவு தன்னை மனத்தில் ஏற்றி,
அன்பின் பதிவாய் அகமகிழந்து இங்கே,
நினைவுகளில் நீந்தி போற்றி நிறைவேன்!



**கு.ப. அசோகன்,**
**25-03-2025** (மதியம் 2-30 மணி)